1970 மார்ச் 4]

பொன்னமராவதிப் பகுதியைக் கூற்றமாக்கல்

* 157. **வினா.—புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயம் தொகுதியிலுள்ள பொன்னமராவதிப் பகுதியைத் தனிக் கூற்றமாகவோ, (Taluk) துணைக் கூற்றமாகவோ, (sub-taluk) ஆக்கும் உத்தேசம் அரசுக்கு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அப்படிப்பட்ட உத்தேசம் ஒன்றும் இல்லை.

புலவர் பொ. பொன்னம்பலம் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நிர்வாக நலனை முன்னிட்டும், மக்களுடைய நலத்தைக் கருத்திலே கொண்டும் பொன்னமராவதியைத் தனிக் கூற்றமாகவோ அல்லது துணைக் கூற்றமாகவோ ஆக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பொன்னமராவதியை அப்படி வைப்பதுதான் நிர்வாகத்திற்கு இடைஞ்சலானது என்றும், இப்பொழுது இருக்கக்கூடிய முறை சௌகரியமாக இருக்கிறது என்றும் அங்குள்ள கலெக்டர் அவர்கள் பரிந்துரை செய்திருக்கிறார்கள்.

தொழில் அபிவிருத்திக்கு மத்திய நிதி உதவி

* 195. **வினா.—திரு. ஏ. எம். இராஜா :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ந் தேதியிலிருந்து 5-ந் தேதிவரை டில்லியில் நடைபெற்ற முதலமைச்சர் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற நிதி அமைச்சர், திட்டக்குழு துணைத் தலைவர், நிதிக்குழுத் தலைவர் இவர்களைச் சந்தித்தாரா ?

(இ) ஆம் எனில், தமிழகத்திற்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழிலுக்காக (Industries) அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்று கேட்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) நமது மாநிலத்திற்கான மத்திய உதவியை அதிகப்படுத்துமாறும், மாநிலத்திலுள்ள பொதுத்துறை நிறுவனங்களுக்கு நிதி உதவி அளிக்கும்படி நிதி நிறுவனங்களுக்குக் கட்டளையிடுமாறும், திட்ட ஆணைக்குழுவிடம் குறிப்பாக வேண்டப்பட்டது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாட்டிலே சென்ட்ரல் செக்டாரிலே எந்த விதமான தொழிற்சாலையும் இல்லை. ஆகவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் திட்டக்குழுத் துணைத் தலைவர், நிதிக்குழுத்